A/L Sat. & Sun.
Chemistry Mr. மகாதேவா
9.30—Inorganic
Physics -Mr. நந்தகுமார்
7.30—Sound
ஆரம்பம் :- 05-04-1986
Bond Institution
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A/L Day Class
Chemistry: Mr. V.T.K.
8.00—Inorganic
9.00—Paper Class
1 30—Organic
Sat. & Sun.
1.00—Organic
Bond Institution
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 17 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப் பிறை 18 (30-03-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:113

## வடக்கிலிருந்து போன—
# தபால் பைகள் எரிந்து நாசம்!

நல்லூர், மார்ச் 30

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்ட சுமார் 115 தபால் பொதிகள் எரிந்து நாசமாகின.

கடந்த 25ஆம் திகதி ஓமந்தைக்கு அருகில், யாழ்தேவி ரயிலில் தீப்பிடித்தபோது இந்தத் தபால் பொதிகளும் எரிந்து முற்றாக நாசமாகிவிட்டன

பதிவுக் கடிதங்கள், கடிதங்கள், மணிஓடர்கள், தந்தி மணிஓடர்கள், பார்சல்கள் — இப்படிப் பல வகையானவையும் இப்பொதிகளில் உள்ளடங்கி இருந்தன.

இவை 22, 23, 24 ஆம் திகதிகளில் தபாலில் சேர்க்கப்பட்டவையாகும்.

மூன்று நாள் தபால்களும் 115 பொதிகளில் கட்டப்பட்டு 25 ஆம் திகதிய ரயிலில் அனுப்பப் பட்டிருந்தன.

முக்கிய கடிதங்கள், பதிவுத்தபால்கள், பணிஓடர்கள், பதவிகளுக்கு விண்ணப்பம் அனுப்பியவர்கள் இதனால் கவலை அடைந்து உள்ளனர்.

இவர்கள் அஞ்சல் திணைக்களத்துடன் இது சம்பந்தமாகத் தொடர்பு கொண்டு உள்ளனர்.

இந்த வேளை ஓமந்தை அருகே தீப்பிடித்த ரயில் இன்னமும் அங்கிருந்து அகற்றப்படவில்லை. ரயில் என்ஜினுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிட நியமிக்கப்பட்ட விசேஷ தொழில் நுட்பக் குழுவும் அங்கு இல்லை

வவுனியாவில் இருந்து ஓமந்தைக்கு தரை மார்க்கமாக வருவதற்கும், குறிப்பாக விபத்து நடந்த இடத்துக்கு வருவதற்கும் தொழில் நுட்பக் குழு உறுப்பினர் அச்சம் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது

இதற்கிடையில், விபத்தில் சேதமடைந்த ரயில் என்ஜின் திருத்த முடியாத அளவுக்குப் பழுதடைந்திருப்பின் யாழ்தேவி ரயில் சேவை நிரந்தரமாக நிறுத்தப்படும் என்று ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

விபத்துக்கு உள்ளான என்ஜின் பாவிக்க முடியாத அளவுக்குச் சேதப் பட்டிருப்பின் அதற்குப் பதிலாக சேவையில் ஈடுபடுத்த வேறு என்ஜின் எதுவும் கைவசம் இல்லை ஆகையால் யாழ்தேவி ரயில் சேவையை நிரந்தரமாக நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் — இவ்வாறு ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன

"இந்து"வில் தகவல்

# சுயாட்சித் திட்டம் வகுக்குமாறு ராஜீவ் இலங்கைக்கு அறிவிப்பு

## எனினும் பேச்சு நடக்கும் என்ற நம்பிக்கை இல்லை

புதுடில்லி, மார்ச் 29

தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை உள்ளடக்கி வடக்கு—கிழக்கு மாகாணங்களுக்கான சுயாட்சித்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி பிரதமர் ராஜீவ் காந்தி, திரு. ஜெயவர்த்தனவுக்கு அறிவித்துவிட்டார்

இதற்கு எந்தப் பதிலும் திரு ஜெயவர்த்தனவிடம் இருந்து இன்னும் கிடைக்கவில்லை.

இவ்வாறு "இந்து" நாளிதழில் அதன் பிரதம செய்தியாளர் திரு. ஜி கே. ரெட்டி எழுதியுள்ளார்

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இனப்பிரச்சினை சம்பந்தமாக தமிழ்த் தலைவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே பேச்சுக்கள் நடக்கும் என்ற நம்பிக்கை மிகக் குறைந்த அளவே தென்படுகிறது.

மார்ச் 31 உடன் திரு. ரொமேஷ் பண்டாரி வெளியுறவுச் செயலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார்

இனப் பிரச்சினைக்கான விசேட தூதராக திரு பண்டாரி இன்னும் நியமிக்கப்படவில்லை.

இலங்கையிடம் இருந்து இனப்பிரச்சினை சம்பந்தமான உறுதியான பதில் இன்னும் கிடைக்கவில்லை. அதனால்தான் திரு. பண்டாரிக்கு விசேட தூதர் நியமனம் வழங்கப்படுவதிலும் தாமதம் காணப்படுகிறது

இலங்கையின் தந்திரோபாயம் என்ன என்றால்,— அரசியல் தீர்வு என்று கூறிக் கொண்டு முடியுமானால் இராணுவ தீர்வைக் காணுவதே

அப்படி இராணுவ தீர்வைக் கண்டவுடன் தமிழ்த் தலைவர்களை பேச்சுக்கு அழைத்து குறைந்தளவு சுயாட்சியை அவர்களிடம் நிர்ப்பந்தமாகத் திணிப்பதே ஆகும்.

தமிழருக்குப் போதிய தன்னாட்சி அமைப்பை வழங்குவதற்கு திரு ஜெயவர்த்தனவை வழிக்குக் கொண்டுவர முடியும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஈஸ்டர்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிக்கும் ஈஸ்டர் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

## காயமடைந்த 3சிப்பாய்களில் ஒருவர் மரணம்

கொழும்பு, மார்ச் 30

பருத்தித்துறை முகாமை நோக்கி போராளிகள் நடத்திய தாக்குதலில் காயம் அடைந்த மூன்று சிப்பாய்களில் ஒருவர், நேற்று அநுராதபுரம் ஆஸ்பத்திரியில மரணம் அடைந்தார்,

## ராஜன் செல்வநாயகம் காலமானார்

மட்டக்களப்பு முன்னாள் இரண்டாவது எம் பி. திரு. ராஜன் செல்வநாயகம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அவருக்கு வயது 60

தமிழரசுக் கட்சி உறுப்பினராக அரசியலில் நுழைந்த அவர் 1962—65இல் மட்டக்களப்பு நகரசபை உறுப்பினராகவும் 1965-1970இல் (4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



முந்தி ஒருக்கா அரசாங்கம் பெரிய தாக்குதலுக்கு தயாராகி வருகுதெண்டு எங்கடை பெடியள் சொன்னபோது, அவை தாங்கள் தாக்குறதுக்காகத்தான் அப்பிடிச் சொல்லுவை எண்டு அச்சாணியார் சொன்னவர்.

இப்ப அதே கதையை அரசாங்கப் பக்கத்துக்கு மாத்தி விட்டுப் பாக்க வேண்டியது தானே...!

# சடலத்தை அகற்ற விடாது மேலிருந்துசூடு

## வயாவிளானில் நடந்தது

பலாலி, மார்ச் 30

வயாவிளானில் நேற்று நடந்த சம்பவம் ஒன்றில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் ஹெலிக்கொப்டர் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். அவரது சடலத்தை அகற்ற விடாது தடுக்கும் விதத்தில் சடலத்தை ஏற்றிய வான் மீதும் சுடப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை 9 மணியில் இருந்து அங்குமிங்குமாக ஹெலிக்கொப்டர் ஒன்று சுற்றிக் கொண்டிருந்தது

காலை 10 30 மணி அளவில் வயாவிளான் சந்திக்கு அருகில் இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தனர்.

மோட்டார் சைக்கிளை நோக்கி ஹெலிக்கொப்டர் சுட்டது பின்னால் இருந்தவர் சூடுபட்டு விழுந்தார். விழுந்தவரை நோக்கி சுற்றிச் சுற்றி ஹெலிக்கொப்டர் சுட்டது.

சூடு பட்ட நிலையில் அவர் இறந்து கிடந்தார். மற்றவர் மோட்டார் சைக்கிளுடன் தப்பிச் சென்று விட்டார்.

அதைத் தொடர்ந்து விமான நிலையப் பக்கம் ஹெலிக்கொப்டர் சென்றது. பின்பு இறந்தவரின் சடலம் சிலரால் வான் ஒன்றில் ஏற்றப்பட்டது. திரும்பி வந்த ஹெலிக்கொப்டர் வானை நோக்கியும் சுட்டது இதனால் வான் சில்லுக்கு காற்றுப் போனது வான் சாரதி வானை விட்டு ஓடித் தப்பினார்.

ஒரு மணித்தியாலமாக அவ்விடங்களைச் சுற்றி ஹெலிக்கொப்டர் சுட்டவண்ணமே இருந்தது.

பிற்பகல் 2 மணி வரை சடலத்தையோ, வானையோ அகற்ற முடியாமல் இருந்தது.

இரண்டு ஹெலிக்கொப்டர்கள் மாறி மாறி ரோந்து புரிந்து கொண்டேயிருந்தன.

இச்சம்பவத்தில் வான் சாரதி உட்பட ஏழு பேர் காயமடைந்தனர்

நேற்றைய சம்பவத்தின் போது கட்டுவன், புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, மயிலிட்டிப் பகுதிகள் ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு உள்ளாகின

# மாநில சுயாட்சிக்கு ராஜீவ் முயற்சிக்கிறார்

## அ.தி.மு.க. நன்றித் தீர்மானம்

சென்னை, மார்ச் 29

கூட்டாட்சி அமைப்பின் கீழ் தமிழர் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகள் அடங்கிய மாநில சுயாட்சி அமைப்பை உருவாக்க பிரதமர் ராஜீவ் காந்தி முயற்சித்து வருகிறார்.

அதற்காக அவருக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நன்றி தெரிவித்துள்ளது.

ஓர் ஆண்டுக்குப் பின்னர் அ.தி.மு.க. செயற்குழு கடந்த சனிக்கிழமை சென்னையில் கூடியபோது இலங்கைத் தமிழர் குறித்து தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும் தமிழர் மீதான ராணுவ அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவரவும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அ. தி மு க. பிரதமர் ராஜீவ் காந்தியைக் கேட்டுக் கொள்கிறது.

மொழி உரிமை, அரசியல் சட்டப் பாதுகாப்பு, மனிதஉரிமைகள் முதலியவற்றை இழந்து ராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியில் சொல்லொணாத் துன்பம் அனுபவிக்கும் இலங்கைத் தமிழர் நிலை குறித்து அ.தி.மு.க. ஆழ்ந்த கவலை தெரிவிக்கிறது.

இப்படி அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

## ரயில் விபத்து: மற்றும் ஒருவர் நேற்று மரணம்

நல்லூர், மார்ச் 30

பரந்தன் யாழ்தேவி ரயில் விபத்து சம்பவத்தில் காயமடைந்த வயோதிபர் ஒருவர் நேற்றுக்காலை யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கடந்த 15-ஆம் திகதி பரந்தனில் யாழ்தேவி தடம்புரண்ட சம்பவத்தில் காயமடைந்த வயோதிபரான கண்ணுச்சாமி சோமசுந்தரம் (60வயது) என்பவரே மரணமானவர் ஆவார்.

# வட பகுதி சிலிண்டர்களுக்கு காஸ் நிரப்ப மறுப்பு

நல்லூர், மார்ச் 30

வட பகுதி சிலிண்டர்களுக்கு காஸ் நிரப்ப சபுகஸ்கந்தை எல். பி காஸ் தொழிற்சாலை ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்

கடந்த 25 ஆம் திகதி சபுகஸ்கந்தை எல். பி. காஸ் தொழிற்சாலையில் சிலிண்டர் ஒன்று வெடித்ததே இதற்குக் காரணமாகும். வட பகுதியில் இருந்து அனுப்பப்பட்ட சிலிண்டரே வெடித்தது.

வட பகுதி சிலிண்டர்களுக்கு காஸ் நிரப்ப மறுத்ததால் யாழ். வைத்தியசாலையில் பிராணவாயுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காஸ் அடுப்பு பாவனையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட பகுதி முகவரியிடப்பட்ட சகல சிலிண்டர்களும் காஸ் நிரப்பப்படாமல் அங்கு தேங்கிக் கிடக்கின்றன என்று தெரிய வருகிறது.

# பருத்தித்துறையிலும் ஹெலிக்கொப்டர் ஷெல் தாக்குதல்கள்

பருத்தித்துறை, மார்ச் 30

பருத்தித்துறையிலும் நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதலும் ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன.

இதனால் பருத்தித்துறை மருதடியிலுள்ள தற்காலிக மரக்கறிச் சந்தையும் மீன் சந்தையும் காலை 11-45 அளவில் கலைந்தன

கடைகளும் பூட்டப்பட்ட நிலையில் பருத்தித்துறை வெறிச்சோடிக் காணப்பட்டது.

பருத்தித்துறைக் கடற்கரைப் பகுதியில் சிலர் மீன்பிடி வள்ளங்களில் வந்ததை அவதானித்த ஹெலிக்கொப்டர் அவர்களை நோக்கித் தாழப் பறந்து சுமார் அரை மணி நேரம் சுட்டது

அவர்கள் வள்ளங்களை விட்டுவிட்டு கடலில் பாய்ந்து தப்பித்துக் கொண்டனர்.

பின்பு ஹெலிக்கொப்டர் தாழப்பறந்து பல தடவை பருத்தித்துறை பழைய (நவீன) சந்தைப் பகுதியை நோக்கிச் சுட்டது. அப்பகுதியிலிருந்த இளைஞர்கள் ஹெலிக்கொப்டரை நோக்கிச் சுட ஆரம்பித்ததும் அது உயரப்பறந்து சென்று விட்டது.

பருத்தித்துறைப் பகுதியில் ஹெலிக்கொப்டர் சூட்டில் ஒரு காரும் ஒரு மினிவானும் சேதமுற்றன

இதனை அடுத்து இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களில் இரண்டாம் குறுக்குத் தெருவில் ஒருவீடும் பருத்தித்துறை செட்டித்தெருவில் ஒரு பிரபல சட்டத்தரணியின் வீடும் சேதமுற்றன

## பேராதனை செல்ல பஸ் சேவை

நல்லூர், மார்ச் 30

பேராதனையில் நடக்கும் வெளிவாரிப் பரீட்சைக்குச் செல்லும் பரீட்சார்த்திகளின் வசதிக்காக மூன்று விசேஷ பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஏப்ரல் முதலாம் திகதி காலை ஆறுமணிக்கு ஒரு பஸ்சேவையில் ஈடுபடுத்தப்படும். இரண்டாம் திகதி காலை 6 மணிக்கு இரு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப் படிப்புகள் கல்லூரியில் இருந்து இந்த பஸ்கள் புறப்படும்.

பதிவுசெய்த மாணவர்கள் அனைவரும் ஒழுங்கின்படி வருமாறு வெளிவாரிப் பட்டப்படிப்பு நிறுவனம் கேட்டுள்ளது.

அத்தோடு பஸ் கட்டணங்களை இன்று ஞாயிற்றுக்கிழமை இரண்டுமணிக்கு முன்னர் நிறுவனத்தில் செலுத்தும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

## டாக்டர்கள் வேலை நிறுத்தம் நேற்றும் தொடர்ந்தது

நல்லூர், மார்ச் 30

யாழ் ஆஸ்பத்திரி டாக்டர்கள் நேற்று இரண்டாவது நாளாக வேலை நிறுத்தம் செய்தனர்.

கடத்திச் செல்லப்பட்ட வைத்திய நிபுணரின் கார் இன்றுவரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

டாக்டர்கள் வேலை நிறுத்தத்தினால் இரண்டாவது நாளாக அவசர சிகிச்சைகள் மட்டுமே நடைபெற்றன.

வெளி நோயாளர் பகுதியில் எந்த ஒரு நோயாளியும் நேற்றுப் பார்வையிடப்படவில்லை. இதற்கான துண்டுகளும் வழங்கப்படவில்லை.

வெகுதூரம் இருந்து வந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் நேற்று வீடு திரும்பினர்.

# வடக்கில் பெரும் தாக்குதலுக்கு தீவிரவாதிகள் முஸ்தீபு

## அரசு கூறுகிறது

கொழும்பு, மார்ச் 30

வடக்கில் பெரியதாக்குதல் ஒன்றைநடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

வல்வெட்டித்துறை அல்லது பருத்தித்துறை அல்லது தொண்டைமானாறு அல்லது காரைநகர் முகாம் தீவிரவாதிகளால் தாக்கப்படலாம் என்று உளவு அறியும் வட்டாரம் மூலம் தெரிய வந்துள்ளது.

வடபகுதியில் உள்ள இராணுவத்தினர் நீண்ட காலத்துக்கு அத்துமீறும் செயல்களைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

பாதுகாப்புப் படையினர் இனி பதில்தாக்குதல்களை நடத்துவதோடு நின்றுவிடாது முழுப் பலத்துடன் தீவிரவாதிகளைத் துரத்தி அடிப்பார்கள்

தீவிரவாதிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இடங்களில் இருந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் ஹெலிக்கொப்டரை நோக்கி ராக்கெட் தாக்குதல்

## ஷெல் தாக்குதலில் வீடுகள் எரிந்தன

நல்லூர், மார்ச் 30

ஊர்காவற்றுறை கடற்பகுதியில் ஹெலிக்கொப்டர் மீது போராளிகள் நேற்று தாக்குதல் நடத்தினர்.

இதனை அடுத்து கடற்படை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

நேற்றுப் பகல் ஒரு மணி அளவில் ஊர்காவற்றுறை கடற்பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்து சென்றது.

ஹெலிக்கொப்டரை நோக்கி போராளிகள் 'ராக்கெட்' தாக்குதல் நடத்தினர்.

ஹெலிக்கொப்டருக்கு ஏற்பட்ட சேதம்பற்றி விபரம் தெரியவில்லை.

இச்சம்பவத்தை அடுத்து ஊர்காவற்றுறை கடற்கோட்டை, காரைநகர் கடற்படை முகாம் ஆகியவற்றில் இருந்து குடிமனைகளை நோக்கி 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சுமார் பத்து நிமிடங்களாக நடைபெற்ற இத் தாக்குதல்களினால் இரண்டு ஓலை வீடுகள் தீப்பற்றி எரிந்தன.

இதனால் இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது

தீவுப் பகுதிக்கான பஸ் சேவைகள் சில மணி நேரம் ஸ்தம்பிதமடைந்தன.

சுபநேரம்

30-3-1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
9 13 முதல் 10.43 வரை
ராகுகாலம்:
4.33 முதல் 6 13 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

உயிர்த்த ஞாயிறு

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராகவனைக் கவர்ந்த இன்றைய நடிகை

தினசரி சினிமா

திரையுலகில் எத்தனையோ நடிகர், நடிகைகளைச் சந்தித்து பழகியவர் பழம் பெரும் நடிகர் வி எஸ் ராகவன்.

இன்றைய நடிகைகளில் அவரைக் கவர்ந்தவர் மாதவி என்று ராகவன் சொல்கிறார்.

மாதவியைப் பற்றி ராகவன் குறிப்பிடுகையில்;

'ஜான்ஸிராணி' என்ற படத்தில் மாதவிக்கு இரட்டை வேடம். அவரது பெற்றோராக நானும், பண்டரிபாயும் நடித்தோம்.

மாதவி ஒரு வேடத்தில் பட்டிக்காட்டுப் பெண்ணாகவும் இன்னொன்றில் கல்லூரி மாணவியாகவும் நடித்தார்.

'சத்தியம் சுந்தரம்' படத்தில் அவர் நடிகர் திலகத்தின் மருமகளாக நடித்தபோது அவருடன் நடித்த நான் அவரது பணிவினையும் திறமையையும் பார்த்து வியந்திருக்கிறேன்.

நான் ஒரு நாள் அமெரிக்கன் லைப்ரரிக்குப் போயிருந்த போது மாதவியும் அங்கு வந்து சில புத்தகங்களை வாங்கிப் போனார். என்னைப் பார்த்து குசலம் விசாரித்து ஆசி வாங்கிக் கொண்டார்.

உலக விவகாரங்களைத் தெரிந்து கொள்ள இந்தப் பெண் இவ்வளவு புத்தகங்களை படிக்கிறாளே என்று ஒரு அலாதி மதிப்பும் ஏற்பட்டது.

''ஜான்ஸி ராணி'' படத்தில் மாதவி நொடிப் பொழுதில் உடைகளை மாற்றம் செய்து கொண்டு அந்தந்தக் காட்சிக்கு ஏற்றபடி வசனம் பேசி நடித்த போது அசந்து போய் விட்டேன்.

ஒரு நாளில் சுமார் நூறு உடைகளில் இப்படி வெவ்வேறு வேடங்களில் நடித்த போது அவரது திறமையைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தேன்.

மாதவி படித்த பெண். எல்லோரிடமும் மரியாதையாக நடந்து கொள்கிறார். சுறுசுறுப்பும் அதிகம். எல்லாவற்றையும் விட தொழிலில் சிரத்தையாக இருக்கிறார்.

அவருக்கு அப்பாவாக நடிக்கும் அனுபவ நட்சத்திரமாக இருப்பதால் இப்படி ஓர் அதிசய நடிகையை பாராட்டாமல் இருக்க முடியுமா? என்றார்

# பஞ்சாப்பில் வேலை நிறுத்தம்

## இந்துக்கள் கொலைக்கு எதிர்ப்பு

புதுடில்லி, மார்ச். 29

**பஞ்சாப் வன்செயலைக் கண்டித்துப் பரந்த அளவில் மாநில தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு உள்ளன.**

தேச விரோதசக்திகளைக் களைந்தெறியும்படி அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு அரசாங்கத்தைக் கோரியுள்ளன.

சீக்கிய ஆதரவாளர்களால் இந்துக்கள் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தே இவ் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இவ் வன்செயல்களைத் தொடர்ந்து அமுலான ஊரடங்கு உத்தரவு தொடர்கிறது.

அதே வேளையில் பொலீஸ் படைகளின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டு உள்ளன.

அனைத்துக் கட்சிகளின் மாநிலத் தலைவர்களும் பஞ்சாப் வன்செயல் காரணமாக உருவான நிலையைக் கூடி ஆராய்ந்தனர்.

இந்திய மத்திய மந்திரி சபையும் கூடி நிலைமையை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகத் தீர்மானித்து உள்ளது.

ஐப்பானிய மாநாட்டில்

## பிரான்ஸ் தரப்பில் 2 வித கருத்துக்கள்

டோக்கியோ, மார்ச். 29

ஜப்பானில் நடைபெற உள்ள வருடாந்த பொருளாதார மாநாட்டில் பிரான்ஸ் தரப்பில் இரண்டு வித கருத்துக்கள் வெளியிடப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பிரான்ஸ் சார்பில் இடதுசாரி ஜனாதிபதி மித்தரண்டும் வலதுசாரி பிரதமர் சிராக்கும் கலந்துகொள்ள இருப்பதைத் தொடர்ந்தே இக்கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பிரெஞ்சுக் குழு இரண்டு தலைகளுடன் செயல்படுமா?

அதன் மூலம் சர்வதேச ரீதியில் பகிடிக்கிடமான முறையில் பிரான்ஸ் நடந்து கொள்ளுமா? இப்படி பிரெஞ்சு நாட்டுப் பிரபல நாளிதழான 'லாமோண்டா' எழுதியுள்ளது.

குழப்படிக்காரர் என்ற பெயரை பிரெஞ்சுப் பிரதமர் சிறக் பெறுவாரா என்று ஜப்பானிய நாளிதழ் ஒன்று எழுதியுள்ளது

## மனிதநேய பக்திஞானி சைதன்ய மகா பிரபு

### பாரத ஜனாதிபதி புகழ் அஞ்சலி

கல்கத்தா, மார்ச். 29

மனித நேயத்தையும் சகோதரத்துவத்தையும் அடிநாதமாகக் கொண்ட பக்திநெறியின் பிதாமகர் சைதன்ய மகா பிரபு

இவ்வாறு பாரத ஜனாதிபதி ஜானி செயில் சிங் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீசைதன்யரின் 500 வது பிறந்ததினவிழாவை கல்கத்தாவில தொடக்கி வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஸ்ரீசைதன்யப் பிரபுவின் பிறந்ததின புதுடில்லி நிகழ்ச்சியொன்றில் பாரதப் பிரதமர் ராஜீவ் பேசும் பொழுது;

பாரதம் தனது கடினமான கட்டங்களை எல்லாம் ஆத்மீக பலத்தாலேயே வென்று தாண்டி வந்துள்ளது என்றார்.

## வெளி உலகில்

### அமெரிக்காவுக்கு கடாபி எச்சரிக்கை

திரிப்போலி, மார்ச் 29

லிபியா மீது அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்தினால், உலகில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது லிபியா தாக்குதலை நடத்தும்.

இப்படி லிபியத் தலைவர் கேர்னல் கடாபி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கக் கடற்படையினர் லிபிய நிலைகள் மீது தாக்குதல்களை நடத்திய ஒரு வாரத்தின் பின்னர் முதல் முறையாகப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில்தான் மேற்கண்ட எச்சரிக்கையை அவர் விடுத்தார்.

### சூடானுக்கு லிபியா ஆயுதம்

சூடான், மார்ச். 29

சூடானுக்கு லிபியா ஆயுதங்களை விநியோகிப்பதாகத் தெரிய வந்துள்ளது என்று அமெரிக்க அரசு அதிகாரிகள் கூறினர்.

சூடானுக்கும் லிபியாவுக்கும் இடையேயான தொடர்புகள் குறித்து, அமெரிக்கா, சூடானுக்கு வழங்கும் உதவிகளை நிறுத்தி வைத்துள்ளது.

# அமெரிக்க இராணுவம்

## பகிரங்கமாகச் செயற்படுகிறது

### மத்திய அமெரிக்க நிலைமை குறித்து நிக்கரகுவா ஜனாதிபதி

மனகுவா, மார்ச் 29

மத்திய அமெரிக்காவில் அமெரிக்க அரசாங்கம் தனது இராணுவத்தினை வெட்ட வெளியாகப் பாவிக்கத் தொடங்கியுள்ளதாக நிக்கரகுவா ஜனாதிபதி குற்றஞ் சாட்டினார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசுகையிலேயே நிக்கரகுவா ஜனாதிபதி மேற்கண்ட குற்றச் சாட்டை வெளியிட்டார்.

ஹொண்டுராஸ் துருப்புக்களை நிக்கரகுவா எல்லைக்கு ஏற்றி இறக்குவதில் அமெரிக்க ஹெலிக்கொப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்க விமானிகளும் ஆலோசகர்களும் இதற்கு உதவுகின்றனர்.

அமெரிக்கப் படைகள் இப்படி வெட்ட வெளியாகச் செயல்படுவது ஆச்சரியமானது அல்ல.

நிக்கரகுவா எல்லைப் புறத்தைத் தாண்டுபவர்கள் சுட்டுக் சொல்லப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.

அமெரிக்க அரசு, நிக்கரகுவா அரசுக்கு எதிரான கிளர்ச்சிப் படைகளுக்கு உதவி வருவது தெரிந்ததே


சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருப்பவர்களுக்கு

**ஓர் அறிவித்தல்**

1. 1985ஆம் ஆண்டு, 56ஆம் இல. வருமான வரித் திருத்தச் சட்டத்தின் கீழ் உங்கள் வட்டி வருமானத்திலிருந்து 01-04-86 தொடக்கம் 20 வீதம் பிடிப்பு வரி கட்டாயமாகக் கழிக்கப்படவிருக்கிறது.
2. வருடாந்தக் கூட்டு வருமானம் (உங்களினதும்; 18 வயதிற்குட்பட்ட பிள்ளைகளினதும்) வரிகட்டும் எல்லைக்கு மேற்பட்டிருந்த போதும் வரிகட்டத் தவறியிருந்தால், அபராதத்துக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றீர்கள்.

எனவே,

- 20வீத வரிக்கழிவை விலக்கவும், குறைக்கவும்,
- அபராதத்தைத் தவிர்க்கவும் — உரிய படிவங்கள், விபரங்களை உடனே பெறுவதற்கு தொடர்பு கொள்ளவும்:

TAXMAN

கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.


### அதிஸ்ட லாபச்சீட்டு முடிவுகள்

கிளிநொச்சி பாரதிபுரம் முருகன் ஆலய கட்டிட நிதிக்காக கடந்த 25. 3. 86 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அதிஸ்ட லாபச் சீட்டிழுப்பில் பின்வரும் இலக்கம் உடைய சீட்டுக்களுக்கு பரிசு வழங்கப்படும்.

1ம் பரிசு இல. 785, 2ம் பரிசு இல 9, 3ம் பரிசு இல. 794

ஆலய நிர்வாகிகள்

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் முருகேசு வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய தலைமையாசிரியர்)

மலர்வு: 29-08-1901 உதிர்வு: 02-03-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், எமது உயர் வாழ்விற்கு வழிகாட்டியாய் விளங்கிய அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1-4-86 செவ்வாய்க்கிழமை ''ஈஸ்வர வாசா'' கைதடி, நுணாவில் இல்லத்தில் நடைபெறும் நினைவு அஞ்சலியில் உறவினர்கள், நண்பர்களைப் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி, நுணாவில்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# கிளிநொச்சி ஆஸ்பத்திரி நிலைமை சீரடைகிறது

கிளிநொச்சி, மார்ச் 30

கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரியில் கடந்த பல மாதங்களாக நிலவி வந்த டாக்டர்கள் பற்றாக்குறை தற்போது ஓரளவு நீங்கியுள்ளதைத் தொடர்ந்து நிலைமை சீரடைந்துள்ளது.

சுமார் நான்கு எம்.பி.பி. எஸ். டாக்டர்களும் மூன்று பதிவு டாக்டர்களும் கடமையாற்ற வேண்டிய இந்த ஆஸ்பத்திரியில் தற்போது இரண்டு எம்.பி.பி எஸ். டாக்டர்களும் மூன்று பதிவு டாக்டர்களும் கடமையில் ஈடுபட்டுள்ளனர்

நயினாதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் எஸ். சத்தியசீலன், கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டு உள்ளார். இவருக்கு உதவியாக டாக்டர் எஸ். வேல்முருகையா கடமையாற்றுவார்

இது இவ்வாறிருக்க வாழைச்சேனை யிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட டாக்டர் திருமதி எல். சர்வானந்தா சுகாதார வைத்திய அதிகாரியாக கிளிநொச்சி வெளிக்கள வேலைகளைக் கவனிக்கும் பொருட்டு நியமிக்கப் படலாம் எனத் தெரியவந்துள்ளது.

### கண்ணி வெடி!

திருகோணமலை-கண்டி வீதியில் மங்கி பிரிட்ஜ் என்னும் இடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்தது.

சிப்பாய்கள் மதகு ஒன்றின் மீது நடந்து சென்று கொண்டிருந்த போதே இக்கண்ணிவெடி வெடித்தது.

### முஸ்லிம்களுக்கு புலிகள் கடிதம்

மட்டக்களப்பு, மார்ச் 30

தமிழ்—முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தித் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட பிரசுரங்கள் தபால் மூலம் மட்டக்களப்பில் உள்ள முஸ்லிம் பிரமுகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு 2 ஆவது எம்.பி ஜனாப். றிஸ்வி சின்னலெப்பை உட்பட 150க்கு மேற்பட்ட முஸ்லிம் மதப் பிரமுகர்கள் பிரசுரங்கள் கொண்ட கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

'அரசபணி' பொறிக்கப்பட்ட கடித உறைகளில் இப்பிரசுரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.


### தேவை

மிகத் திறமையான முறையில் ஆங்கில கருத்தெழுத்து, தட்டெழுத்து கற்பிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த ஆசிரியை தேவை. தகுதிச் சான்றிதழ் நற்சான்றிதழ் பத்திரத்துடன் நேரில் செவ்வாய் 1.4.86 காலை 9.30 க்கு தொடர்பு கொள்ளவும். Director, Bitsmans, Institutes. Manipay.

### விற்பனைக்கு

Denon-Mini Compo 280 Watts, Jvc 2 in one stereo விற்பனைக்கு. 268/5 நாவலர் ரோட் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## மக்கள் துயர் துடைக்கும் பணியில் பிரஜைகள் குழுக்கள்

### மயிலணி புதிய மின்மாற்றி அங்குரார்ப்பண வைபவத்தில் உரை

சுன்னாகம், மார்ச் 30

மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் மக்களின் துயர் துடைக்கவும் — மக்களுக்காக நீதி கேட்கவும் வல்ல ஸ்தாபனமாக இன்று தமிழ் மண்ணில் இயங்கும் ஸ்தாபனங்கள் பிரஜைகள் குழுக்களே.

முன்னாள் யாழ் கல்விப் பணிப்பாளரும் சுன்னாகம் பிரஜைகள் குழுவின் தலைவருமான திரு தி. மாணிக்கவாசகர் இப்படிக் கூறினார்.

மயிலணியில் புதிய மின்மாற்றியை இயக்கி வைத்து அவர் உரையாற்றினார்.

மின்மாற்றி நிலையத்தைத் திறந்து வைத்த உடுவில் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இவ்விழாவில் பேசுகையில் மின்மாற்றியை மக்கள் தமது சொத்தாகவே மதிக்கவேண்டும்.

மின்மாற்றிக்கு அதிக பளு ஏற்றப்படுவதால்பல இடங்களிலும் அவை விரைவில் செயலிழந்து விடுகின்றன.

களவாக மின்சாரம் பெறுவோர் மின்மாற்றிக்கு தாம் கேடு விளைவிப்பதை உணரவேண்டும் என்றார்.

சுன்னாகம் உத்தியோகத்தர் திரு இராமலிங்கம் தமது உரையில் கள்ள மின்சாரம் பெறுவோரால் பல இடங்களில் விலைமதிக்க முடியாத மனித உயிர்கள் பலியானதை விவரமாக எடுத்து விளக்கினார்.

அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளர் திரு. எஸ். பரமநாதன், கூட்டுறவுச் சங்க தலைவர் திரு சி குமாரவேல், டாக்டர் ஆ நடராஜா, திரு. ஆசீர்வாதம் ஹென்றி உட்பட பலர் உரையாற்றினர்.

### பிரஜைகள் குழு அலுவல்கள் ஸ்தம்பிதம்

கிளிநொச்சி, மார்ச். 30

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் நிர்வாகத்தினரிடையே எழுந்த உட்பூசல்களால் அலுவலகம் கடந்த சில தினங்களாக பூட்டப்பட்டு குழுவின் அலுவல்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதனால் இவ் அலுவலகத்திற்கு வரும் பொது மக்கள் தமது அலுவல்களைக் கவனிக்க முடியாது உள்ளனர்.

நாளாந்தம் அலைந்து திரிந்து இறுதியில் ஏமாற்றம் அடைந்த நிலையில் அவர்கள் வீடு திரும்ப வேண்டி உள்ளது.

இராணுவ நெருக்கடிகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய இக்குழுவினரை காண முடியாத நிலையில் கிளிநொச்சி மக்கள் உள்ளனர்.

காஸ் சிலிண்டர் சம்பவம்

# 3 தமிழர் கைது

## விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவு

கொழும்பு, மார்ச் 30

மார்ச் 18 இல் மூகத்துவாரத்தில் காஸ் சிலிண்டர் வெடித்த சம்பவம் தொடர்பாக மூன்று வடபகுதித் தமிழர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவ்விபத்தில் மூவர் பலியாகினர் என்பது தெரிந்ததே.

வட பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட காஸ் சிலிண்டர் ஒன்றில் ஒக்ஸிஜன் நிரப்பப்பட்டுக்கொண்டிருந்த சமயமே அது வெடித்தது.

அந்த காஸ் சிலிண்டரைக் கொண்டு வந்த லொறியின் சாரதி, கிளீனர், சிலிண்டருக்குப் பொறுப்பானவர் ஆகியோர் கடந்த புதன் கிழமை கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

புலன் விசாரணைகள் இடம் பெறுவதால் மூன்று சந்தேக நபர்களையும் விளக்க மறியலில் வைக்கும் படி பொலீஸார் விண்ணப்பித்தனர்.

சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்கும்படி பிரதம நீதிவான் உத்தரவிட்டார்.

அதிகாரமளிக்கப்பட்ட

### சட்டத்தரணியின் பங்களாவில் இராணுவ முகாம்

திருகோணமலை, மார்ச் 30

திருகோணமலை நகரில் உப்புவெளி 3ஆம் கட்டைச் சந்தியில் ஆயுதப் படை முகாம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

தமிழ்ச் சட்டத்தரணி ஒருவருக்குச் சொந்தமான பங்களாவில் இந்த ஆயுதப்படை முகாம் அமைக்கப்படும் என்று தெரிகின்றது

கடந்த ஆண்டு இடம் பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து அந்தச் சட்டத்தரணி குடும்பத்தினருடன் வெளியேறி வேறிடத்தில் வசித்து வருகின்றார்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



திருமதி செல்வதியம்மா, சிற்றம்பலம்

(ஆசிரியை, வட்டு / கார்த்திகேய வித்தியாலயம்)

வீட்டுக்கிருத்தியம் 3-4-86 செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டையிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவத்தில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறேன்

சோதிநாதன் சிற்றம்பலம்

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உங்கள் மனச்சுமையை கடவுள் முன்னர் இறக்கி வையுங்கள். கண்ணீருடன் துன்பங்களை எடுத்துரையுங்கள். இறைவன் நீங்கள் வேண்டியவற்றை நிறையத் தருவான்.

சாரதா தேவியார்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073
30-03-86 த. பெ. 28

## டாக்டர்களின் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் கடந்த இரண்டு நாட்களாக டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

வேலை நிறுத்தம் சம்பள உயர்வு கோரியல்ல. வேறு விசேஷ சலுகை எதுவும் கேட்டுமல்ல. டாக்டர் ஒருவரின் கார் கடத்தப்பட்டதை ஆட்சேபித்துத்தான் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியானது இப்போது பலவிதத்தாலும் நொந்து போயுள்ளது. மருந்து வசதி, உபகரண வசதி, ஆள் வசதி என்பன அங்கு அருகி வருகின்றன அவற்றைச் சீர் செய்ய அரசாங்கம் உதவுவதாக இல்லை. எங்கள் மக்களில் வசதி படைத்தோர் தானும் கைகொடுப்பதாகவும் இல்லை. நாளாந்தம் அதன் நிலை மேன்மேலும் அர்க் கெட்டு வருகிறது. ரயில் விபத்து நடந்தால் மருந்தில்லை; ஒக்ஸிஜின் இல்லை என்ற நிலை.

ஆனால் யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும் கொண்ட ஓர் ஆஸ்பத்திரி எப்போதையும் விட இப்போதுதான் கட்டாயம் தேவைப்படுகிறது நாளுக்கு நாள், வேளைக்கு வேளை, மணிக்கு மணி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயம் அடைவோர், உயிருக்கு இரந்து நிற்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்த இருமுனைப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியை ஸ்தம்பிக்கச் செய்வது எம்மை, எமது மக்களை நாமே அழித்துக் கொள்வதற்குச் சமமாகும்.

டாக்டரின் காரைக் கடத்திக்கொண்டு சென்றவர்களும், அதனைக் காரணம் காட்டி வேலைநிறுத்தம் செய்யும் டாக்டர்களும் இதனை உணர்ந்து கொள்வது அவசியம்.

காரைக் கடத்தியவர்கள் யார் என்பது இன்னமும் வெளிப்படையாக இனம் காட்டப்படவில்லை இந்த விஷயத்தில் உண்மையான விடுதலைப் போராளிகளுக்கு பெரும் பொறுப்புண்டு.

தமிழ் மக்கள் கஷ்டப்படும் இந்த இக்கட்டான வேளையில் டாக்டர்கள், என்ஜினியர்கள், கல்விமான்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புத்தி ஜீவிகள் பலர் வெளி நாடுகளுக்குப் பறந்து விட்டார்கள். அவர்கள் சுயநலமிகள் மட்டுமல்லர்; கோழைகளும் ஆவர்.

தமது சொந்த மண்ணில் மக்கள் இன்னற்பட்டுக் கொண்டிருக்கும் வேளை, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியவர்கள் வேற்று நாடுகளுக்குப் போய் விட்டார்கள்!

அப்படியிருந்தும், ஒரு சிலர் மட்டுமே இங்கே மக்களோடு மக்களாகக் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். அது மட்டுமன்றி மக்களுக்குச் சேவையும் செய்து வருகிறார்கள்

குறிப்பாக வசதி வாய்ப்பு இல்லாத யாழ் ஆஸ்பத்திரியில் இன்னமும் சேவை புரியும் டாக்டர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களை மேன்மேலும் உற்சாகமளித்து, மக்கள் சேவைக்குத் தூண்டும் பொறுப்புப் போராளிகளுக்கு உண்டு.

மனிதனுக்கு ஏற்படக்கூடிய உயிராபத்தைத் தவிர்க்கக் கூடியதான சக்தி கடவுளுக்கு அடுத்து டாக்டர்களுக்கு மட்டும்தான் உண்டு.

எனவே அவர்களுக்கு மட்டுமன்றி, அவர்களைப் போல அத்தியாவசிய, அவசர சேவைகளைச் செய்வோருக்கு இடைஞ்சல் கொடுக்காதிருப்பது அவசியம் அவர்களுக்குத் தரும் இடைஞ்சல் பொதுமக்களுக்குக் கொடுக்கும் இடையூறாகும். இதனை உண்மையான போராளிகள் உணரத் தவறமாட்டார்கள்; தவற முடியாது; தவறவும் கூடாது.

இந்த விஷயத்தில் வேலை நிறுத்தம் செய்யும் டாக்டர்களுக்கும் ஒன்றைக் கூற விரும்புகிறோம்.

உங்கள் சேவை மக்களுக்கு அத்தியாவசியமானது. அது வெறும் தொழில் அல்ல கஷ்டமான சூழ்நிலையிலும் நீங்கள் செய்யும் பணி மகத்தானது. எனினும் நோயாளர் நலனை மனதில் நிறுத்தி அதற்கு முதன்மை இடம் கொடுத்த பின் உங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பியுங்கள்.

கடத்தப்பட்ட காரைத் திரும்பப் பெறுவதற்குச் சக்தி வாய்ந்த இயக்கங்களை முதலில் நாடியிருக்கலாம். அது தோற்றாலும் உண்மை நிலையை பகிரங்கப்படுத்தி அதறகும் வெற்றி இல்லையென்றால் மட்டுமே உங்கள் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்திருக்கவேண்டும். அவசரப்பட்டு விட்டதாகவே நாம் கருதுகிறோம்.

தென்னிலங்கையில் வேலை நிறுத்தம் நடந்தால், பயங்கரவாதத்தால் நாடு கஷ்டப்படும் போது அது அவசியம் தானா என்று அங்குள்ளவர்கள் கேட்கிறார்கள்

அரச பயங்கரவாதத்தால் நாம் கஷ்டப்படும் வேளை நீங்கள் வேலை நிறுத்தம் செய்யலாமா என்று தமிழ் மக்கள் உங்களைக்கேட கலாம் அல்லவா?

## 56 படமாளிகைகள் மூடப்பட்டுவிட்டன

கொழும்பு, மார்ச் 30
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 56 படமாளிகைகள் மூடப்பட்டு விட்டன.

வன்செயல்கள் காரணமாகவே இப்படமாளிகைகள் மூடப்பட்டதாக இலங்கைத் தியேட்டர் உரிமையாளர், படவிநியோகஸ்தர்கள் சங்கம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

தமிழ்ப் படங்களை இறக்குமதி செய்து திரையிட அனுமதி தரும்படியும் சங்கம் ஜனாதிபதியைக் கோரி உள்ளது.

# உயிர்த்த இயேசுவில்

# புதுவாழ்வு வாழ்வோம்



இறப்பு என்பது அழிவைக் குறிக்கிறது முடிவைக் குறிக்கின்றது ஆனால் உயிர்ப்பு என்பது புதிய ஆக்கத்தைக் குறிக்கின்றது. புதிய தொடக்கத்தைக் குறிக்கின்றது.

அழிவின் பின்தான் புதிய ஆக்கம் வரவேண்டும். முடிவின் பின்தான் புதிய தொடக்கம் வர வேண்டும் இறப்பின் பின்தான் உயிர்ப்பு வர வேண்டும்.

உயிர்க்க வேண்டுமாயின் இறக்க வேண்டும்.

ஞானக்கதிர்

புதுவாழ்வைத் தொடங்க வேண்டுமாயின் பழைய வாழ்வை பாழாய்ப் போன எண்ணங்களை மறக்க வேண்டும்

கிறிஸ்து இறந்தார். அதனால் தான் உயிர்த்தார். உயிர்ப்பு வாழ்வில் நாமும் பங்கு கொள்ள வேண்டுமாயின் நாமும் பழையவற்றை அழித்து புதிய வாழ்விற்கு உயிர்த்தெழ வேண்டும்

புனித சின்னப்பர் தனது திருமுகங்களிலே உயிர்த்த இயேசுவோடு புதுவாழ்வு வாழுதல் என்றால் என்ன என்பது பற்றிக் கூறியிருக்கிறார்

அவரே தன்னுடைய வாழ்வில் உயிர்த்தகிறிஸ்துவைக் கண்டவர். அவரோடு வாழத்தன் வாழ்வை மாற்றி புது வாழ்வாக அமைத்தவர். எனவே அவரின் வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் அல்ல. உயிர்த்த இயேசுவோடு புது வாழ்வு வாழ்ந்த அனுபவ வார்த்தைகள்.

'இறந்தோரிடம் இருந்து எழுந்த கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் இறைவன் நமக்கு நம்பிக்கை தரும் புதுப் பிறப்பை அளித்தார் (1 இரா. 1;3) அந்த வாழ்வை நாம் வாழும் பொழுது அது புது அனுபவமாகிறது புதுவாழ்வை நாம் வாழவில்லை நம்மில் கிறிஸ்து வாழுகிறார். இவ்வாறு தான் வாழ்ந்து பெற்ற அனுபவத்தைத்தான் புனித சின்னப்பர் புதுப்படைப்பு அல்லது புது வாழ்வு என்று அழைக்கிறார்

ஒருவன்கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால் புதியதொரு படைப்பாகி விடுகிறான். பழையன கழிந்தன. இதோ புதியன தோன்றி உள்ளன' (2கொரு 5;17) என்ற வார்த்தைகளும் புனித சின்னப்பர் கிறிஸ்துவில் வாழ்ந்த புதுஅனுபவ வாழ்வையே குறிக்கிறது.

தான்பெற்ற அந்த கிறிஸ்து அனுபவத்தை நாம் எல்லோரும் பெற வேண்டும் என்பதே அவரின் விருப்பமாகும்.

உயிர்த்த கிறிஸ்துவின் உயிர்ப்பு வாழ்வை நாமும் வாழவேண்டுமாயின் நாமும் புதுவாழ்வு வாழத்தொடங்க வேண்டும். அது இன்றே நாம் வாழும் சமூகத்தில் நாம் வாழத் திணிக்கப்பட்ட துன்பமான சூழ்நிலைகளில் தொடங்க வேண்டும்.

துன்பம் என்பது நமக்குத் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகி விட்டது. துன்பத்தில் வாழ்வது எப்போதும் கஷ்டமானது. துன்பத்தில் வாழ்கிறோம் என்பதால் நாம் நமது கட்டுப்பாடுகளையும் வாழ்க்கை ஒழுக்க முறைகளையும் தூர எறிந்துவிட முடியாது.

நம்மோடு வாழ்பவனும் துன்பத்தில் வாழ்கிறான் என்பதை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். நமக்கு இன்னும் துன்பம் வரவில்லை என்று மற்றவர்கள் துன்பத்தில் கலந்து கொள்ள முடியாது. இது தமிழர்கள் என்பதாலே நமக்குக் கொடுக்கப்படும் பொதுவான துன்பமாகும். இதை நாம் எல்லோரும் பொதுவாக ஏற்று அனுபவித்துப் பகிர்ந்து வாழ வேண்டும்.


'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற பழமொழி நமக்கு நன்கு தெரியும். நாம் ஒன்றுபட்டு நின்றால்தான் இந்தநாட்களில் உண்டு வாழலாம். பாகுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் எம்மில் இருக்கத்தான் செய்யும் ஆனால் அவற்றின் மத்தியிலும் ஒரு ஒற்றுமை இருக்கவேண்டும்.

துன்பம் என்பது துயர வாழ்வுதான். அதற்காக நாம்நமது ஒழுங்குகளைத் தூர எறிந்து விட முடியுமா? சட்டத்தையும் ஒழுங்கையும் நிறைவேற்ற ஒருவரும் இல்லை என்பதால் சட்டமும் ஒழுங்கும் இல்லாமல் போய்விடுமா?

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் எமக்குப் புது வாழ்வு தேவை. அதை எவரும் எமக்குத் தரப் போவதில்லை முதலில் நாமே நமக்குள் அதை அமைத்துக் கொள்ளல் வேண்டும். அதன் பின்புதான் புது வாழ்வை மற்றவர்களிடம் எதிர்பார்க்கலாம்.

உயிர்த்தஇயேசு புது வாழ்வை எமக்குத்தருவார். அதில் வாழ முனைந்து நிற்போம் கிறிஸ்துவின் உயிர்ப்பு உளமாற்ற விழாவாக அமைய இறை அருளை இறைஞ்சி நிற்கின்றோம்.

ரூபன் மரியாம்பிள்ளை



### பொய்யாமொழி

குறள்:

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

பொருள்:

தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும், நடுவு நிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிடவேண்டும்

## வடக்கு, கிழக்கில் நடப்பது மக்களையும், உடைமைகளையும் மண்வளத்தையும் அழிக்கும் யுத்தம்

### மேர்ஜ் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்.30
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம் பெறுவது அரசாங்கம் கூறுவது போல் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை அல்ல மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் மண்ணின் வளத்தையும் அழிக்கும் முழு அளவிலான யுத்தமே.

பல் இன நீதி சமத்துவத்துக்கானஇயக்கத்தின் யாழ்ப்பாணக்கிளை விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டு உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் உள்ளவர்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதாகக் கூறி இயக்கம் இந்த அறிக்கையை விடுத்து உள்ளது.

மேர்ஜ் இயக்க யாழ் கிளைத் தலைவர் வண பிதா ஜே. ஈ ஜெயசீலன் விடுத்த இந்த அறிக்கை வருமாறு:-

இலங்கை அரசு, இராணுவத்தீர்வு ஒன்றுக்கே தயாராகி வருவதையே அதிகரித்து வரும் அடக்குமுறைகளும் அவற்றை நியாயப்படுத்துவதற்கு கூறப்படும் காரணங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

வடக்கு, கிழக்கில் என்ன நடக்கிறது என்பதை நாட்டின் ஏனைய பகுதி மக்கள் அறிய வேண்டும்.

அழிவையும் அடக்குமுறையையும் எதிர்நோக்கும் மக்களை தங்க அரசின் ஒரு அங்கம் எனக் கருத வேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

மத்திய கிழக்கில் இஸ்ரவேல் நடத்தும் தாக்குதல்கள், அழிவுகளை ஒத்ததாக இங்கும் உள்ளது.

அரசு தனது நடவடிக்கைகளினால் உளரீதியாக பிரிவினையைத் தவிர்க்க முடியாத ஒன்றாக மாற்றி விட்டது

அரச படைகள் நடத்தும் வானத்தாக்குதல்களாலும் ஏனைய ராணுவ நடவடிக்கைகளினாலும் உயிர், உடைமைகள் பாதிக்கப்பட்டு உள்ளன.

இது சம்பந்தமான விவரங்களையும் நடக்காத சம்பவங்களையும் முற்றாகப் பிரித்து தனது கட்டுப்பாட்டில் உள்ள பொதுசன தொடர்புச் சாதனங்கள் மூலம் அரசாங்கம் கூறுகிறது

சிங்களவர்களுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு சிங்களவர்களுக்குப் பாரதூரமான நட்டத்தை உண்டுபண்ணும் விதத்தில் அரசு நடந்து கொள்வதை சிங்கள மக்களுக்கு நாம் எடுத்துச் சொல்ல வேண்டியுள்ளது. இது எமது கடமை.

இப்படி 'மேர்ஜ்' இயக்கம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

வானத் தாக்குதல் இடைநிறுத்தத்திலும்

## தமிழர் படுகொலை நடக்கும் போது பேச்சுவார்த்தையா?

### ஈரோஸ் கேட்கிறது

சென்னை, மார்ச் 30
வானத்தாக்குதல் இடை நிறுத்தம் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் காலத்திலும் தமிழர் படுகொலை தொடருகிறது.

அப்படி இருக்கும்போது பேச்சுவார்த்தைக்கு எம்மை அழைப்பதில் என்ன அர்த்தம் உண்டு? ஈரோஸ் இயக்கம் சென்னையில் விட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;-

ஒரு வார கால வானத் தாக்குதல் இடை நிறுத்த [illegible] ஆயுதப்படை [illegible] தல்களை நடத்தியுள்ளனர்.

இலங்கை ஆயுதப்படை ஊர்காவல்படை ஆகியவற்றின் தாக்குதலில் அந்த ஒரு வார காலத்தில் 75 தமிழர் மரணமானார்கள் 55 தமிழர் காயமடைந்தனர். 552 தமிழர் கைது செய்யப்பட்டனர்

வீடுகள், வயல்கள், பயிர் பச்சைகள் அழிக்கப்பட்டன பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். பரந்தனுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் குண்டு வைத்து ரயில் சேதமாக்கப்பட்டது

வானத்தாக்குதல் இடை நிறுத்தக் காலத்தில் இவ் [illegible] உண்டு?

இலங்கைத் தமிழரை இனப்படுகொலையில் இருந்து காப்பாற்றும்படி ஈரோஸ் இயக்கம் உலக மனித உரிமை ஸ்தாபனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

[illegible] பேச்சுவார்த்தைக்கு எம்மை அழைப்பதில் என்ன அர்த்தம்

### மாவடி கலா நிலையத்தில் இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 30
வட்டுக்கோட்டை மாவடி கலாநிலையத்தில் பருவகால இசை நிகழ்ச்சி இன்று பிற்பகல் 2 30 மணி தொடக்கம் இடம் பெறும்.


### தம்பாலையில் விழுந்த 8 ஷெல்கள்

பலாலி, மார்ச் 30
கடந்த வியாழன் தொண்டமானாறு இராணுவ முகாமில்இருந்தும், பலாலி இராணுவ முகாமில் இருந்தும் எட்டு ஷெல்கள் அச்சுவேலியில் உள்ள தம்பாலைக் கிராமத்தை நோக்கி ஏவப்பட்டன.

தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள்' முதலில் பேரிரைச்சலுடன் வந்து விழுந்து வெடித்தன.

இதைத் தொடர்ந்து பலாலி முகாமில் இருந்து தொடர்ச்சியாக ஏவப்பட்ட ஆறு ஷெல்கள் தம்பாலை வீதியிலும், தோட்டங்களிலும் விழுந்து வெடித்தன.

கி. வா. ஜ. வாழ்க!



சொல்லரும் புகழ்பேர் பெற்றோய்
சுவைமிகும் பேச்சில் வல்லோய்
நல்லறம் போற்றும் பண்ப
நற்றமிழ் வளர்க்கும் மேலோய்
கல்வியால் கேள்வி தன்னால்
கலைகளால் உயர்ந்தோய் மேலும்
பல்வகைச் சிறப்பும் சேரப்
பாரிடை வாழி நீடே.

* * *

பன்முறை இந்நாட்டிற்
பைந்தமிழ் வளர்த்தல் வேண்டி
கன்னல் நேர் பிரசங்கங்கள்
நிகழ்த்தினை சமயம் என்னும்
நன்மையை வளர்த்தற்காக
நாளெலாம் உழைத்தல் செய்வோய்
நின்னரும் பணிகள் கண்டே
நினைநாம் போற்றுகின்றோம்.

— பாலமுரளி

[அறிஞர் கி. வா. ஜகந்நாதனின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்விட்டு இக்கவிதை இன்று இங்கு பிரசுரமாகிறது.]

## தாதிகள் சங்கத்துக்கு பிக்கு தலைமை வகிக்கலாம்!

### அதனை ஆதரித்து உண்ணாவிரதம்

கொழும்பு, மார்ச் 30
பெண்கள் அங்கம் வகிக்கும் மாதர் தொழிற் சங்கத்திற்குப் பௌத்த பிக்கு தலைமை வகிக்கலாமா?

இனப்பிரச்சினைசூடுபிடித்துள்ளது.

உண்ணாவிரதம், உபவாசம், அரச வைபவங்களை பகிஷ்கரிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட பௌத்த பிக்குகள் தீர்மானித்துள்ளனர்.

வேலை நிறுத்தம் செய்யும் ஐக்கிய தாதிகள் சங்கத்திற்கு பௌத்த பிக்கு ஒருவர் தலைவராக இருக்கிறார்.

பெண்கள் சங்கத்திற்கு பௌத்த பிக்கு தலைமை வகிக்க முடியாது திரிபிடகம் இப்படிச் சொல்கிறது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறினார். அது மட்டுமல்ல, பிக்கு தலைவராக இருக்கும் மட்டும் அச்சங்கத்துடன் பேச்சுக்கள் நடத்த மாட்டேன் என்று ஜனாதிபதி கூறிவிட்டார்.

இது பௌத்த பிக்குகள் மத்தியில் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது

கடந்த வியாழன் மாலை நாரஹென்பிட்டியில் பிக்குகள் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

பெண்கள் சங்கத்திற்கு பிக்கு தலைமை வகிக்கலாம் என்று கூட்டத்தில் பிக்குகள் பேசினர்

கூட்டத்தின் இறுதியில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அரச வைபவங்கள் எதிலும் பௌத்த பிக்குகள் கலந்து கொள்ளக் கூடாது. அரச நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரிப்புச் செய்ய வேண்டும். இது தொடர்பாக தலதா மாளிகை முன்பாக பௌத்த பிக்குகள் உண்ணாவிரதம், உபவாசம் இருக்க வேண்டும்.

இப்படி அத்தீர்மானம் கூறியது.

### குடும்ப முதலுதவி நூல்வெளியீடு

பருத்தித்துறை,மார்ச் 30
வைத்திய கலாநிதி கனக சுகுமார் எழுதிய "குடும்ப முதலுதவி" என்ற நூல் வெளியீடு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராஜலிங்கம் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு த சிதம்பரப்பிள்ளை வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

## மேற்கு ஜெர்மன் என்ஜினியரின் வேலைக்கார பெண்ணிடம் வாக்கி டோக்கி

திருகோணமலை,மார்ச்30
மேற்கு ஜெர்மன் என்ஜினியர் ஒருவரின் வீட்டு வேலைக்காரப் பெண்ணிடம் இருந்த வாக்கி டோக்கி சாதனத்தை ஆயுதப் படையினர் பறிமுதல் செய்தனர்.

என்ஜினியரின் தலையீட்டைத் தொடர்ந்து பெண் விடுவிக்கப்பட்டார்.

திருமலையில் இச்சம்பவம் இடம்பெற்றது

கடந்த செவ்வாய்க்கிழமை சாம்பல்தீவு, ஆத்திமோட்டை கிராமங்களைச் சுற்றிவளைத்து ஆயுதப்படையினர் தேடுதல் நடத்தினர் அச்சமயம் ஒருபெண் உட்பட 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

அந்தப் பெண்ணிடம் தான் வாக்கிடோக்கி சாதனம் இருந்தது.

மேற்கு ஜெர்மன் என்ஜினியர் தந்ததாக அப்பெண் பாதுகாப்புப் படையினரிடம் சொன்னார்

நிலாவெளியில் உள்ள மேற்கு ஜெர்மன் ஒலிபரப்பு நிலையத்தில் அந்த என்ஜினியர் பணிபுரிந்து வருகிறார்.

அந்த என்ஜினியரின் தலையீட்டின்பேரில்பெண் விடுவிக்கப்பட்டார். ஆனால் வாக்கி டோக்கியை ஆயுதப்படையினர் பறிமுதல் செய்தனர்.

ஏனைய 21 பேரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை

### வண. பிதாவுக்கு ஆறுதல் கூறும் மக்கள்

நல்லூர், மார்ச் 30
வண. பிதா ஏ. சகாயதேவனுக்கு பெரும் திரளான மக்கள் சென்று ஆறுதல் கூறினர்.

யாழ்ப்பாணம் ஆசனக் கோயிலின் இரண்டாவது மதகுருவாகச் சேவையாற்றி வரும் வண பிதா ஏ. சகாயதேவன் சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி குருநகர் புனித சிலுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே

இவரை சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் சென்று வழிபட்டு கண்ணீர் மல்க ஆறுதல் கூறிவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TOEFL**
New Batch Commences
on 15-3-86
Fees - only Rs. 250 only for the full course
Lecturer Mr. Kandiah Navarendran
Cantabia Institute
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

# உதயன்

30. 03. 1986 ஞாயிற்றுக்கிழமை

**Telivision Engineering Course**
(6 Months - weekends)
Theory and Practicals
விரிவுரையாளர் Mr. E. கணபதிப்பிள்ளை
ஆரம்பம் 9-3-1986.
கட்டணம்: மாதம் ரூா. 250
Cantabia Institute
21, MAIN STREET, JAFFNA. T'Phone. 24201

## வித்தாரம்

என்ன, தம்பி முரளி யாரே, வாரும் வாரும்! என்ன உங்காலைப் பக்கமாய் இருந்து வாறீர். தெல்லிப்பளையில் இருந்து வாறுயாக்கும்!

எப்பிடியோ தப்பி வந்துவிட்டாய். இப்ப அங்க நித்தமும் ஹெலிக்கொப்டர் றவுண்டேஸ் அடிக்கினம். அது மட்டுமே மோட்டார் சைக்கிள், வானுகளைக் கண்டால் ஒரே சூடுதான்.

உனக்குத் தெரியுமே ஒரு சங்கதி. ஹெலிக்கொப்டரால சுடுறது வானத் தாக்குதல் இல்லையாம்.

வானத் தாக்குதலை நிப்பாட்டிறதாச் சொல்லிப்போட்டு, ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்திறியளே, அது சரியோ எண்டு கேட்டபோது, எங்கடை அச்சாணியார் அதுக்குக் குடுத்த இந்த விளக்கம் தான் சிரிப்பானது தம்பி.

ஹெலிக்கொப்டர் வானத்திலை பறக்கிறயில்லை. பூமிக்கும் வானத்துக்கும் இடையிலை பறக்கிற சாதனம் எண்டு நினைச்சிட்டார் போலை அவராவது அந்த மட்டு.

அவரது குழாத்தைச் சேர்ந்த இன்னொருவர் வெளிநாட்டுச் செய்தி ஏஜென்சி ஒண்டுக்கு, விமானத் தாக்குதல் தொடருமா இல்லையா எண்டது பற்றி கருத்துச் சொல்லிப்போட்டுப் பிறகு அதை தன்ரை பேரிலை போட வேண்டாம் எண்டு மறிச்ச சங்கதி எங்கே உனக்குத் தெரியப் போகுது!

அந்த அறிக்கையிலை அவர் ஆடின சன்னதம் என்னா? அப்பிடியா, இப்பிடியா தமிழ் மக்களைப் பாத்துப் பாத்து தீவிரவாதிகளை விட்டு வைக்க முடியாது தீவிரவாதிகளைத் தாக்கும் போது தமிழ் மக்கள் பாதிக்கப்படுகினம் எண்டதுக்காகத்தான் நாங்கள் விட்டு வைக்கிறோம். அந்தக் கட்டத்தை இப்போது தாண்டியாச்சு. — இப்பிடி ஆவேசமாக் கூறியிருந்தார் அந்தப் பெரும்புள்ளி. ஆனால் பிறகு தான் சொன்ன தாய் வெளிக்கிடுத்த வேண்டாம் எண்டு வெளிநாட்டுச் செய்தி ஏஜென்சிக்கு சொல்லிப்போட்டாராம். உப்பிடி, அரசாங்கத்திலை இருக்கிறவை சணம் பித்தம், சணம் வாதம் எண்டு அடிக்கடி மாறுகினம். உவை சொல்லுற எதையும் நம்ப ஏலாதப்பா!

* * *

யாழ்ப்பாணத்திலும் தரை மார்க்கமாக வந்து போராளியளைப் பிடிக்கப் போகினம் எண்டு இப்ப சொல்லுகினம். வடமராட்சியிலை அது ஆரம்பமாகும் எண்ட மாதிரி கொழும்புப் பத்திரிகை ஒண்டு எழுதியிருக்கு.

இதுகளைப் பார்த்தபிறகும் இவை இராணுவத் தீர்வை நாடாமல் அரசியல் தீர்வுக்கு வழி செய்வினம் எண்டு எந்த மடையன் நம்புவான்?

அரசாங்கம் செய்யிற ஆயத்தங்களையும், அவை சொல்லுற கதைகளையும் பேட்டா கிட்டடியிலை பெரிய நெருக்கடி வரும் போலை கிடக்கு.

தீவிரவாதியளை அழிக்கிறம் எண்டு சொல்லி இன்னும் கொஞ்சம் பெரிய அளவிலை தமிழரை அழிக்கிற போக்கிலைதான் கதைகள் போகுது . .

சரி, உதுகளை நினைச்சு ஏன் மண்டையைக் குழப்புவான்! வாயிக்கை பாப்போமே . . . !

இன்னொடி

---

திருமலை மாவட்டத்தில் கைதான

# 23 தமிழர் பற்றி தகவல் இல்லை

## இணைப்பு அதிகாரி கைவிரிக்கின்றார்

திருகோணமலை, மார்ச் 30

திருகோணமலை மாவட்டத்தில் ஜனவரி மாத இறுதியில் கைதானவர்களில் 23 தமிழருக்கு என்ன நடந்தது?

இக்கேள்விக்குப் பதில் சொல்லும் நிலையில் நான் இல்லை — இப்படி திருகோணமலை மாவட்ட இணைப்பு அதிகாரி தெரிவித்திருக்கின்றார்.

மூதூரில் கைதான 23 தமிழர்கள் நிலை என்ன? அவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? என்று கேட்டு திருகோணமலை பிரஜைகள் குழு மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ஹர்ஷா குணரத்னவுக்கு எழுத்துமூலம் முறையிட்டது.

அந்த 23 பேர்களின் பெயர் விவரங்கள், கைது செய்யப்பட்ட நேரம், திகதி முதலியவற்றையும் பிரஜைகள் குழு சமர்ப்பித்து இருந்தது.

பின்னர் பிரஜைகள் குழு நேரிலும் இணைப்பு அதிகாரியைச் சந்தித்து முறையிட்டது.

கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படும் அந்த 23 தமிழரில் இரண்டு பேர் மட்டுமே பூஸா தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

முத்துக்குமாரு விஜயசுந்தரம், கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் ஆகியோரே பூஸா தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய 21 பேர்களைப் பற்றிய தகவல் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை —இப்படி இதற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அதிபர் ஹோரத் சொன்னார்.

இதுபற்றித் தகவல் தெரிவிக்கையில்,

இதுசம்பந்தமானகேள்விக்குப் பதிலளிக்கும்நிலையில் நான்இல்லை – என்று இணைப்பதிகாரி சொன்னார்.

'பெப்ரவரி முதலாம் திகதிக்குப் பின்னர் கைது செய்யப்படுபவர்கள் குறித்து சரியான எழுத்துமூலமான தஸ்தாவேஜுகளை வைத்து இருக்க வேண்டும் என்று நான் பணித்துள்ளேன்'' – இப்படி இணைப்பதிகாரி சொன்னார்.

இதனிடையில் தம்பலகமம் கிராமத்தில்வைத்து கைது செய்யப்பட்ட இரண்டு தமிழர் பற்றியும் தகவல் இல்லை என்றும் இணைப்பு அதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த இரண்டுபேரின் பெயர்களும் (குழந்தைவடிவேலு,துரைநாயகம்) இணைப்பதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அப்படியான நபர்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை என்று தகவல் வந்துள்ளதாக உதவிப் பொலீஸ் அதிபர் ஹோரத் சொன்னார்.

குழந்தைவடிவேலுகவ ஆயுதப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தான் பார்த்ததாக அவரின் மனைவி கூறியது இணைப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதுகுறித்து நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்று இணைப்பு அதிகாரி பதிலளித்தார்.

## பருத்தித்தறையில் வயோதிபர்

### துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

பருத்தித்துறை, மார்ச்30

பருத்தித்துறை இராணுவப் பொலிஸ் கூட்டு முகாமிலிருந்து சுமார் 500 யார் தொலைவில் வயோதிபர் ஒருவர் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானார்

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை நடந்தது

பலியான வயோதிபர் திரு எஸ். கணேசபிள்ளை (வயது 62) பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் முன்னாள் காவலாளி.

இவர் அரசின் ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயச் சட்டத்தின் பின்னர் தனது சொந்த வீட்டை விட்டு வேறு இடத்திற்கு இடம் பெயர்ந்து வசித்து வந்தார்.

எனினும் இவர் தனது வீட்டுக்கு வெள்ளிக்கிழமை தோறும் சென்று வீட்டைக் கழுவி வருவது வழக்கம்.

வழக்கம்போல் கடந்த கடந்த வெள்ளியும் தனது வீட்டிற்குச் சென்று வீட்டை கழுவிக் கொண்டிருக்கும் போது சிப்பாய்கள் பதுங்கி இருந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்

இவரது கால்கள், மார்பு, முதுகு ஆகிய பகுதிகளில் பல துப்பாக்கிச் சூடுகள் விழுந்தன.

இவர் அதே இடத்தில் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவரது சடலத்தை அரை மணி நேரத்தின் பின் இப்பகுதி இளைஞர்கள் சென்று மீட்டெடுத்து உறவினர்களிடம் ஒப்படைத்தார்கள்

இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் இராணுவம் நடமாடும் பிரதேசத்திற்குப் பொதுமக்களைச் செல்ல வேண்டாம் என இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு மாற்றம்

நல்லூர், மார்ச் 30

கடந்த திங்கட்கிழமை (24-3-86) தொண்டமானாறில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டின் போது காயமடைந்த திரு. கே. ஆறுமுகம் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

இவர் தொண்டமானாறிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றி வந்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை அவருக்குச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

[சந்நிதி கோயில் சுற்றுடலில் கிடந்த சடலங்கள் இரவில் அகற்றப்பட்டன'' என்ற தலைப்புடன் 27-3-86 ஆம் திகதிய உதயனில் வெளிவந்த செய்தியில் திரு. கே. ஆறுமுகம் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தார் என்றவாறு வெளிவந்தது தவறுதலாகும். இதனால் அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மனக்கிலேசங்களுக்காக வருந்துகிறோம் — ஆசிரியர்]

## காரைநகரில் அல்லின் ஞாபகார்த்த கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

காரைநகர் தந்த வாணியல் மேதை அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் நினைவு தினத்தை ஒட்டிய பொதுக் கூட்டம் காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும்.

யாழ் பல்கலைக் கழக ஆங்கிலக் கற்பித்தல் துறைத் தலைவர் திரு. சி. க. சிவகுருநாதன் தலைமை வகிப்பார்.

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கதிர்காமர், யாழ் வானியற் கழகத் தலைவர் திரு. டபிள்யு ஏ. செந்திநாதன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விஞ்ஞானத் துறைத் தலைவர் திரு து. விசுவநாதன் ஆகியோர் பேசுவர்.

அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் ஞாபகார்த்தச் சபை இக்கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது

## யாழ் சட்டத்தரணிகள் சங்கம் உடனுக்குடன் வெளிநாடுகளுக்குத் தகவல்தரும்

யாழ்ப்பாணம், மார்ச் 30

தமிழ்ப் பகுதிகளில் நிகழும் வன்செயல்கள் தொடர்பான சரியான தகவல்களைத் திரட்டி இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உடனுக்குடன் அறிக்கை வெளியிட யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதனை நடைமுறைப்படுத்த பல பகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சங்கம் ஒரு குழுவைத் தெரிவு செய்திருக்கிறது

அவசரகாலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் தடுத்து வைக்கப்பட்டு உள்ளவர்களுக்கு உதவி வழங்கும் திட்டத்தையும் சட்டத்தரணிகள் சங்கம் தயார் செய்துள்ளது.

இப்படியானவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனையை வழங்கவும் சங்கம் முன் வந்துள்ளது.

## தராசு படிகளுக்கு முத்திரை

யாழ்ப்பாணம், மார்ச் 30

தராசு,படிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நாளை 31ஆம் திகதிமுதல் ஏப்ரல் 11 ஆம்திகதிவரை நடைபெறும்.

குறிப்பிட்டகால எல்லைக்குள் சகல வர்த்தகர்களும் தராசு, படிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளவேண்டும் என்று யாழ் மாவட்ட உதவி உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வடக்கில் பெரும் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் வெளியேறி விடவேண்டும்.

கடந்த 7நாட்களில் தீவிரவாதிகள் பருத்தித்துறை, தொண்டமானாறு இராணுவ முகாம்கள் மீதும் காரைநகர் கடற்படை முகாம்மீதும் தாக்குதல்கள் நடத்தி உள்ளனர்.

தன்னியக்க துப்பாக்கிகள் மூலமும் சிறு பீரங்கிகள் மூலமும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தச் சம்பவங்களின் போது ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டார். இருவர் காயம் அடைந்தனர்.

பாதுகாப்புப் படையினரை ஆத்திரமூட்டச் செய்வதில் தீவிரவாதிகள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்

பாதுகாப்புப் படையினர் தமது முகாம்களுக்குள் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

தீவிரவாதிகள் தொடர்பாக நல்லெண்ணத்தை உருவாக்குவதற்காக அரசாங்கம் மார்ச் 15ஆம் திகதி முதல் தாக்குதல் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைத்தது.

வடபகுதி நிலைமையை மேலும் விருத்தி செய்வதற்காக தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீதான விமானத் தாக்குதல்களும் இடைநிறுத்தி வைக்கப்பட்டன.

தீவிரவாதிகள் இந்த நல்லெண்ணச் செயலை குறுகிய மனப்பான்மையோடு தமக்குச் சாதகமாகக் கொண்டு முகாம்களில் உள்ள வீரர்கள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுயாட்சித் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று டில்லி கொள்கை வகுப்பாளர்கள் நம்பினர்.

இலங்கை தங்களை வெறும் சவாரிக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டதை இப்போதுதான் டில்லி கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்து களைத்துப்போய் உள்ளனர்.

இந்த நிலையில் இரு பண்டாரியோ அல்லது வேறு எவரும் கொழும்பு சென்று அங்கு உள்ள முட்டுக்கட்டையை நீக்க முடியாது.

போராளிகளும் ... பார்க்க இந்த இழுபறித் ... தான் நடத்தை ஏற்படுத்தும் –இது இந்தியாவின் எண்ணம்.

போராளிகள் இப்போதைய ... தங்களை அதிகரித்துக் ... இப்படி திரு ஜி. கே. ரெட்டி எழுதியுள்ளார்.

## ராஜன் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை உறுப்பினராகவும் பணி ஆற்றினார்.

1970 பொதுத் தேர்தலில் கயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு மட்டக்களப்பு இரண்டாவது எம். பி யாக திரு ராஜன் செல்வநாயகம் பணியாற்றினார்.

பின்னர் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரியாகவும் பணிபுரிந்தார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்; தஷ்ப்ரு உமா எக்ஸ்போர்ஸ் லிமிட்டெட்,207 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 30-03-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number QJ60 N 86

## விளையாட்டரங்கு

# டெரிமகான் சாதனை!

## 2ஆவது செஞ்சுரியை எட்டினார்

### மத்திய கல்லூரியின் வெற்றி தொடருகிறது

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், மார்ச் 30

நடைபெற்றுக்கொண்டிருக்கும் யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் பருவகாலத்தில் தொடர்ந்து இரண்டாவது செஞ்சுரி பெற்ற சாதனையை மத்திய கல்லூரி வீரர் டெரிமகான் நிகழ்த்தியிருக்கிறார்.

இந்தப் பருவகாலத்தில் இதுவரை இரண்டு செஞ்சுரிகள் மட்டுமே அடிக்கப்பட்டன இரண்டு செஞ்சுரியையும் டெரிமகானே பெற்று வடபகுதியில் சிறந்த துடுப்பாட்ட வீரர்களுள் ஒருவர் என்ற சாதனையை அவர் நிலைநாட்டியிருக்கிறார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டத்தில் அவர் தமது இரண்டாவது செஞ்சுரி சாதனையை எட்டிப் பிடித்தார்

இந்த ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது

இந்த ஆட்டத்திலும் வெற்றி பெற்ற யாழ் மத்திய கல்லூரி, யாழ் மாவட்டத்தில் இவ்வருடம் சகல ஆட்டங்களிலும் வெற்றிபெற்ற ஒரே கல்லூரி அணி என்ற சாதனையை நிலைநாட்டியிருக்கிறது.

ஸ்கந்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் டெரிமகான் சகல துறைகளிலும் தனது திறமையை நிரூபித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி அணி ஒதுக்கப்பட்ட 48 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து அதி உச்சமாக— 266 ஓட்டங்களை — எட்டிப் பிடித்தது

டெரிமகான் 101, பிரபாகரன் 67, விவேகானந்தன் 46 ஓட்டங்களைப் பெற்றனர்.



டெரிமகான்

நிரஞ்சன் 10 ஓவர்கள் பந்துவீசி 56 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

யாழ் மத்திய கல்லூரி வீரர்கள் துடுப்பெடுத்தாடிய போது ஸ்கந்தா பந்து வீச்சாளர்கள் பந்து வீச முடியாமல் திணறினார்கள் மத்திய கல்லூரி துடுப்பாட்ட வீரர்கள் நாலாபுறமும் பந்தை விளாசி அடித்து ஓட்டங்களை வேகமாகக் குவித்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா வீரர்களினால் துடுப்பாட்டத்திலும் சோபிக்க முடியவில்லை மத்திய கல்லூரி வீரர்களின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறினார்கள்; விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்து சரிந்து கவிழ்ந்தார்கள் மத்திய கல்லூரியின் 266 ஓட்டங்களுக்குப் பதிலாக மொத்தம் 55 ஓட்டங்களை மட்டுமே அவர்களால் பெற முடிந்தது

பந்து வீச்சிலும் டெரிமகானே முன்னணியில் நின்றார் தாம் வீசிய முதல் ஓவரிலேயே தொடர்ந்து 3 விக்கெட்டுக்களை அவர் கைப்பற்றினார்

2.5 ஓவர்கள் மட்டுமே பந்து வீசிய அவர் 7 ஓட்டங்களுக்கு மொத்தம் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ராஜசேகர் 4 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் —

விவேகானந்தன் 5 ஓவர்கள் பந்து வீசி 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்

ஸ்கந்தா துடுப்பாட்ட வீரர்களினால் மொத்தம் 24.5 ஓவர்கள் மட்டுமே ஈடுகொடுக்க முடிந்தது. அதற்குள் அவர்கள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

## திருக்கோவிலில் மர்மக் கப்பல்?

கொழும்பு, மார்ச் 30

திருக்கோவில் கடற்பிரதேசத்தில் கரையிலிருந்து சுமார் 2 மைல் தொலைவில் ஒரு கப்பல் நடமாடியது.

அந்தக் கப்பல் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றுக்குச் சொந்தமானது. அதில் நிறைய கொள்கலன்கள் இருந்தன.

விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர்கள் மேலே சுற்றி வட்டமிட்டுப் பார்த்த போது கப்பலில் ஏராளமான கொள்கலன்கள் இருப்பது தெரிந்தது.

ஹெலிக்கொப்டர்கள் ரோந்து சுற்றத் தொடங்கியதும் அந்தக் கப்பல் நகர்ந்து சென்று விட்டது

இவ்வாறு தேசிய பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

## அடையாள கார்ட் மட்டும் தாபாலில் வந்தது!

நல்லூர், மார்ச் 30

பொல்காவலை ரயில் நிலையத்தில் பொதிகளுடன் சேர்த்து களவாடப்பட்ட அடையாளக் கார்ட் ஒன்று தபால் மூலம் உரியவரிடம் கர வெட்டி வந்து சேர்ந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மலையக பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் பெறுவதற்கான பரீட்சையில் கலந்து கொள்ளச் சென்ற அரியரத்தினம் புஸ்பராணி என்ற பெண் தனது அடையாளக் கார்ட் உட்பட தனது உடமைகளை பொல்காவலை ரயில்நிலையத்தில் பறிகொடுத்தார்.

இச்சம்பவம் பற்றிய செய்தி கடந்த 2 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது.

அவர் பறிகொடுத்த பொருள்களில் அவருடைய அடையாளக் கார்ட் மட்டும் கடந்த வாரம் அவருடைய வீட்டிற்கு தபாலில் வந்து சேர்ந்தது.

## மட்டக்களப்பிலும் தாதிகள் சுகவீன லீவு

மட்டக்களப்பு, மார்ச் 30

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலும் தாதிகள் சுகவீன லீவில் சென்றனர்.

75 சதவீதமான தாதிகள் இப்படி லீவில் சென்றனர்.

## பொலீஸிடம்

கொழும்பு, மார்ச் 30

மாத்தளை நகரில் சப்மெஷின் துப்பாக்கிகளுடன் வான் ஒன்றில் செல்லும் சமயம் கைதான இரண்டு தமிழ் இளைஞர்களும் மேல்விசாரணைக்காக இரகசிய பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## 60பேர்விடுதலை

கல்முனை, மார்ச் 30

காரைதீவில் கைது செய்யப்பட்டவர்களில் சுமார் 60 பேர் வரையில் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருடன் தொடர்பு கொண்டார்.

அதைத் தொடர்ந்து தான் அரச ஊழியர்களான சுமார் 60 பேர் விடுவிக்கப்பட்டனர்.

## நீத்தார் பட்டியல்

### சின்னத்தம்பி செல்லப்பா

சுன்னாகம் வாரிசப்புலத்தைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி செல்லப்பா (ஓய்வு பெற்ற பொலீஸ் அலுவலக லிகிதர்) காலமானார் இவர் பூரணபிப்ள்ளையின் அன்புக் கணவரும், நித்தியலட்சுமி, இரவீந்திரன் (பொறியியலாளர் சபா மலேசியா), முரளிதரன் (சவுதி அரேபியா), யோகேந்திரன் (கணக்காளர் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன், ஜெனி, சுமித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்தூரி, நிசந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று (30.3.86) பி.ப 01-00 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
செ. யோகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org